வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்— கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியம்

தேதி 23.6.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

மாணவர்கள் தங்கள் திறன்களால் பூமியில் எதிர்காலத்தில் ஒரு பெரிய மாற்றத்தை கொண்டு வர முடியும் என குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

இந்திய கடற்படையின் புதிய போர்க் கப்பலான ஐஎன்எஸ் தாமல் வரும் ஜூலை 1 ஆம் தேதி நாட்டுக்கு அர்ப்பணிக்கப் படுகிறது.

கனிஷ்கா குண்டு வீச்சு தாக்குதலின் 40 ஆவது ஆண்டு நினைவு இன்று அனுசரிக்கப்பட்டது.

புகையிலை இல்லா இளைஞர் நலன் இயக்கம் 2.0- வை, சிறப்பாக செயல்படுத்தியதற்காக மத்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு விருது வழங்கி உள்ளது.

**முர்மு (12)**

உலகம் காலநிலை மாற்ற நெருக்கடியை எதிர்கொள்கிறது என்றும், நிலைத்தன்மை என்பது இனி ஒரு முழக்கமாக மட்டும் அல்லாமல் தேவையாகவும் உள்ளது என்றும், குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறியுள்ளார். புதுடெல்லியில் உள்ள இந்திய செலவு கணக்காளர்கள்

நிறுவனத்தின் தேசிய மாணவர் பட்டமளிப்பு விழா 2025 ல் உரையாற்றிய அவர், மாணவர்கள் தங்கள் திறன்களால் பூமியில் எதிர்காலத்தில் ஒரு பெரிய மாற்றத்தை கொண்டு வர முடியும் என்று கூறினார். மேலும், இந்திய செலவு கணக்காளர்கள் நிறுவனம் இந்திய பொருளாதாரத்தை உலகின் வலிமையான ஒன்றாக மாற்றுவதில் முக்கிய பங்கு வகிப்பதாகவும் திருமதி முர்மு தெரிவித்தார். இந்தியாவில் கணக்கியல் நடைமுறைக்கு நீண்ட வரலாறு உண்டு என்று கூறிய குடியரசு தலைவர், இந்நிறுவனத்தின் பாடத்திட்டங்கள் எதிர்கால இந்தியாவிற்கு பெரிதும் பயனளிக்கும் என்றும் கூறினார்.

**முர்முவின் உரைகள் (8)**

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு ஆற்றிய உரைகளின் தொகுப்பு சிறகுகள் நம் நம்பிக்கைகள் – தொகுதி 2 என்ற புத்தகத்தை மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று மாலை புதுடெல்லியில் வெளியிட்டார். அப்போது பேசிய பாதுகாப்பு அமைச்சர், இப்புத்தகம் வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான இலக்குகளை அடைவதற்கு மக்களை ஊக்குவிக்கும் என்றார். மேலும், இப்புத்தகத்தில் நாகரீகம், கலாச்சாரம், கல்வி மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட தலைப்புகள் இடம்பெற்றுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

## அமித் ஷா (12)

உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் மத்திய மண்டல கவுன்சிலின் 75 ஆவது கூட்டம் நாளை நடைபெற உள்ளது. இதில், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், உத்திரபிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் ஒவ்வொரு மாநிலத்தையும் சேர்ந்த 2 மூத்த அமைச்சர்கள் கலந்து கொள்ள உள்ளனர். இதுவரை, அனைத்து மாநில அரசுகள், மத்திய அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் ஒத்துழைப்புடன் கடந்த 11 ஆண்டுகளில் பல்வேறு மண்டல கவுன்சில்கள் மற்றும் நிரந்தர குழுக்களின் மொத்தம் 61 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்ற வழக்குகளை விரைவாக விசாரித்து தீர்வு காணும் சிறப்பு நீதிமன்றங்களை செயல்படுத்துதல் உள்ளிட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகள் குறித்து இந்த கூட்டங்களில் விவாதிக்கப்படும்.

## பதினோராம் ஆண்டு (7)

இந்தியா, கடந்த 11 ஆண்டுகளில், சேவை, நல்லாட்சி, ஏழைகள் நலன் என்ற கொள்கைகளின் அடிப்படையில், புரட்சிகரமான பல மாற்றங்களை சந்தித்துள்ளது. இந்த 11 ஆண்டுகளில், பல்வேறு முக்கிய துறைகளில் அரசு மேற்கொண்ட முக்கிய முயற்சிகள் குறித்து, ஆகாஷ்வாணி சிறப்பு தொடர்

ஒன்றை வழங்குகிறது. அந்த வரிசையில், இந்தியாவின் சிறுபான்மை மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி, வாய்ப்பு மற்றும் அதிகாரமளித்தல் ஆகியவற்றில் மத்திய அரசின் திட்டங்கள் குறித்த, ஒரு செய்தித் தொகுப்பு....

(வாய்ஸ்)

**பதினோராம் ஆண்டு வாய்ஸ் 1 (18)**

கடந்த 11 ஆண்டு காலமாக சிறுபான்மையின சமூகத்தினரை கல்வி, பொருளாதாரம், உள்கட்டமைப்பு உள்ளிட்டவற்றில் குறிப்பிடத் தகுந்த அளவில் முன்னேற்றம் காணும் வகையில் மத்திய அரசு இலக்கு நிர்ணயித்து பல திட்டங்கள் மூலம் செயல்பட்டு வருகிறது. இதில், பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் திட்டத்தின் மூலம் மட்டுமே 18 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன. தேசிய சிறுபான்மையினர் மேம்பாடு மற்றும் நிதிக் கழகம் மூலமாக வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், பார்சிகள், ஜைனர்கள் போன்ற சமூக பிற்படுத்தப்பட்ட பிரிவு பயனாளிகளுக்கு 752 கோடி ரூபாய்க்கு மேல் கடனுதவிகள் வழங்கப் பட்டுள்ளன. ஹஜ் பயண பயனாளிகளுக்கு ஹஜ் சுவிதா செயலி மூலம் அவர்களது நலனை உறுதி செய்துள்ள அரசு, ஹஜ் பயணத்தில் ஈடுபடும் தன்னார்வலர்களுக்கு

பயணம் குறித்த பயிற்சிகளை அளித்து வருகிறது. மேலும், வக்பு வாரிய சொத்துக்களை பராமரிக்க வெளிப்படைத்தன்மை, ஆளுமையை வலுப்படுத்தும் வகையில் வக்பு திருத்த சட்டம் 2025 ஐ அமல்படுத்தி உள்ளது. மேலும், பௌத்த மதத்தை சேர்ந்தவர்களுக்கான ஜியோ பார்சி திட்டத்தின் மூலம் பார்சி உள்ளிட்ட சிறுபான்மையின மக்களை கல்வி,

***பதினோராம் ஆண்டு வாய்ஸ்*** 2 (7)

கலாச்சாரம், பொருளாதாரம் மற்றும் சமூக நலனில் உள்ள தேவைகளை பூர்த்தி செய்து மேம்படுத்தவும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. கல்வி உதவித் தொகை, பாரம்பரியத்தை பாதுகாப்பது, மறுமலர்ச்சி உள்ளிட்டவற்றில் முன்னேற்றம் காண உதவும் பல திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டு செயலாக்கப்படுகின்றன. இவை வெறும் கொள்கை அளவில் மட்டும் அல்லாமல், அரசின் உறுதி மொழியாகவும் விளங்குகிறது என்றால் அது மிகையாகாது

***ஐஎன்எஸ் தாமல்*** (6)

இந்திய கடற்படையின் புதிய போர்க் கப்பலான ஐஎன்எஸ் தாமல் வரும் ஜூலை 1 ஆம் தேதி நாட்டுக்கு அர்ப்பணிக்கப் படுகிறது. இந்தியா மற்றும் ரஷ்யாவின் அதிநவீன தொழில்நுட்பங்களுடன் உருவாக்கப் பட்டுள்ள இந்த போர்க் கப்பல் 125 மீட்டர் நீளம் மற்றும் 3 ஆயிரத்து தொள்ளாயிரம்

டன் எடை கொண்டது. இக் கப்பல் இந்திய கடற்படையின் மேற்கு பிரிவில் இணைக்கப்பட உள்ளது.

**கனிஷ்கா (2)**

கனிஷ்கா குண்டு வீச்சு தாக்குதலின் 40 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்பட்டது. இதுகுறித்த செய்தித் தொகுப்பு .....

(வாய்ஸ்)

**கனிஷ்கா வாய்ஸ் 1(16)**

1985 ஆம் ஆண்டு இதே நாளில் கனடாவில் இருந்து புதுடெல்லி வந்து கொண்டிருந்த ஏர்-இண்டியா விமானத்தை அட்லாண்டிக் பெருங்கடல் பகுதியில் தீவிரவாதிகள் குண்டு வீசி தாக்கியதில் 329 பயணிகள் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதல் கனடாவை மையமாக கொண்டு செயல்பட்டு வரும் காலிஸ்தான் தீவிரவாதிகளால் நடத்தப்பட்டது.

கனிஷ்கா வெடிகுண்டு தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு புகழஞ்சலி செலுத்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், இனி வரும் காலங்களில் இது போன்ற கோழைத்தனமான

தாக்குதலை இந்தியா ஒருபோதும் சகித்துக் கொள்ளாது என்று தெரிவித்தார்.

இதனிடையே, மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு துறை அமைச்சர் திரு ஹர்திப் சிங் புரி, உத்தரபிரதேச மாநில இணையமைச்சர் திரு பல்தேவ் சிங் ஹவுலாக், சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்தர் சிங் லவ்லி, குர்வீர் சிங் பிரார் மற்றும் பாஜக மூத் தலைவர் தருண் சுக் உள்ளிட்ட 8 பேர் அடங்கிய இந்திய குழுவினர் அயர்லாந்தின் கார்க்-ல் உள்ள அஹாகிஸ்டா நினைவிடத்தில் கனிஷ்கா குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

***கனிஷ்கா வாய்ஸ்*** 2(5)

அப்போது பேசிய அமைச்சர், இந்த துயர சம்பவம் மனித குலத்தின் மீது ஏற்பட்ட ஒரு கரை என்றும், பயங்கரவாதமும், தீவிரவாதமும் இன்றைக்கு உண்மையான அச்சுறுத்தலாகவே உள்ளது என்றும் கூறினார். அஞ்சலி நிகழ்ச்சியில் அயர்லாந்து பிரதமர் திரு மார்ட்டின் மற்றும் கனடா அமைச்சரும் கலந்து கொண்டனர்.

**புகையிலை இல்லா புதுவை (18)**

புகையிலை இல்லா இளைஞர் நலன் இயக்கம் 2.0- வை, சிறப்பாக செயல்படுத்தியதற்காக மத்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு விருது வழங்கி உள்ளது. 2024-25 ஆம் ஆண்டில் இந்த இயக்கத்தின் கீழ், கல்வி நிறுவனங்களின் அருகில் புகையிலை பொருட்கள் விற்பனையை தடுப்பதற்காக மஞ்சள் கோடு பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல், கல்வி நிறுவனங்களை புகையிலை இல்லாத கல்வி நிறுவனங்களாக அறிவித்தல், காவல் துறையுடன் இணைந்து புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா என்று சோதனை நடத்துதல், மருத்துவ மற்றும் பல் மருத்துவ கல்லூரிகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 20 புதிய புகையிலை பழக்க மீட்பு மையங்களை நிறுவுதல், மேலும், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பொது இடங்களில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொண்டதற்காக புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த விருதினை பெற்றுக்கொண்ட டாக்டர் எஸ் கோவிந்தராஜன் டாக்டர் சி வெங்கடேஷ் ஆகியோர் முதலமைச்சர் அலுவலகத்தில், முதலமைச்சர் திரு ரங்கசாமியை சந்தித்து வாழ்த்து பெற்றனர். அப்போது சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், சட்டப்பேரவை துணை தலைவர் திரு ராஜவேலு ஆகியோர் உடனிருந்தனர்.

***மாணவர் சேர்க்கை (7)***

2025-26 ம் கல்வியாண்டில் புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் புதுச்சேரி அரசு ஒதுக்கீட்டு இடங்கள் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களில் முதுகலை பட்டப்படிப்புகளான எம்டெக், எம்சிஏ, எம்பிஏ மற்றும் எம்எஸ்சி படிப்புகளில் சேர தகுதியான மாணவர்கள் ஜூலை 1 ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி வரை இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என்றும், மேலும், விவரங்களை www.ptuniv.edu.in மற்றும் www.pgacpdy.in ஆகிய வலைதள முகவரிகளில் அறிந்து கொள்ளலாம் என்றும், புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

***கச்சா எண்ணெய் (17)***

ஈரான்-இஸ்ரேல் நாடுகளுடையே போர் பதற்றம் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், சர்வதேச சந்தைகளில் கச்சா எண்ணெய் விலை கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது. ஈரான் மீதான இஸ்ரேல் தாக்குதலில் அமெரிக்காவும் இணைந்ததை தொடர்ந்து உலகின் முக்கியத்துவம் வாய்ந்த எண்ணெய் கப்பல்கள் வழித்தடமான ஹார்மஸ் ஜலசந்தியை மூட ஈரான் நாடாளுமன்றம் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. ஈரானிய அணு சக்தி நிலைகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியதற்கு பதிலடியாக இது கருதப்படுகிறது.

முன்னதாக, அமெரிக்காவின் ஆபரேஷன் மிட்நைட் ஹேமர் தாக்குதல் குறித்து விளக்கம் அளித்த அமெரிக்க துணை அதிபர் திரு வான்ஸ் கூறுகையில், இது ஈரானுக்கு எதிரான போர் அல்ல என்றும், அந்நாட்டின் அணு ஆயுத திட்டத்திற்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல் என்றும் கூறியுள்ளார்.

இந்நிலையில் ஈரான் வெளியுறவு அமைச்சர் திரு அப்பாஸ் அராக்ச்சி, பேச்சு வார்த்தைகளுக்காக இன்று மாஸ்கோ சென்றுள்ளார்.

இதற்கிடையே, ஐநா பொது செயலாளர் திரு ஆண்டரியோ குட்டரேஸ், அமெரிக்காவிற்கும், ஈரானுக்கும் இடையே நிலவும் பதற்றத்தை தணிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

***<u>ஷியாமா பிரசாத்</u>*** **<u>(15)</u>**

டாக்டர் ஷியாமா பிரசாத் முகர்ஜியின் 72 வது நினைவு தினத்தை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி அன்னாருக்கு அஞ்சலி செலுத்தி உள்ளார். நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் முயற்சியில் அர்ப்பணிப்புடனும், துணிச்சலுடனும் செயலாற்றியவர் முகர்ஜி என்றும், ஷியாமா பிரசாத்தின் தன்னிகரற்ற பணியை நாடு என்றும் நினைவு கூறும் என்றும் பிரதமர் அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார்.

புதுடெல்லியில் உள்ள பாஜக தலைமையகத்தில் டாக்டர் ஷியாமா பிரசாத் முகர்ஜியின் சிலைக்கு மலரஞ்சலி செலுத்திய கட்சியின் தேசிய தலைவர்

திரு ஜே பி நட்டா, சுதந்திர போராட்ட வீரராகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும் நாட்டுக்காக அரும்பணி ஆற்றியவர் முகர்ஜி என்று கூறினார். ஜம்மு காஷ்மீருக்கு தனி அந்தஸ்து அளிப்பதால் ஏற்படும் விளைவுகளை அப்போதே உணர்ந்திருந்த அவர், அதனை கடுமையாக எதிர்த்தார் என்றும் தெரிவித்தார்.

சுதந்திர போராட்ட வீரரான டாக்டர் ஷியாமா பிரசாத் முகர்ஜி 1953 ஆம் ஆண்டு ஸ்ரீநகர் சிறையில் இருந்த போது உயிரிழந்தார்.

**கார்கில் போட்டி(8)**

வரும் ஜூலை 26 ஆம் தேதி கார்கில் போர் வெற்றி தினம் கொண்டாடப்பட உள்ள நிலையில், அதன் ஒரு பகுதியாக 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற கார்கில் போரில் உயிர் தியாகம் செய்த கேப்டன் அனுஜ் நய்யரின் நினைவாக குர்பதாங்கில் உள்ள ஆஸ்ட்ரோ டர்ஃப் மைதானத்தில் கால்பந்து போட்டிகள் நடைபெற்றன. கேப்டன் அனுஜ் நய்யர் ஆல் லடாக் கால்பந்து சேம்பியன்ஷிப் போட்டிகளில் லடாக் பகுதியை சேர்ந்த 24 அணிகள் பங்கேற்றன. அவருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இந்திய ராணுவத்தால் இப்போட்டிகள் நடத்தப்படுகின்றன.

கிரிக்கெட் (5)

அடுத்த ஆண்டு இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற உள்ள டி-20 கிரிக்கெட் போட்டிகளில் 20 அணிகள் விளையாட உள்ளன. ஏற்கனவே 12 அணிகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள நிலையில், தற்போது கனடா அணி இப்போட்டியில் விளையாட தகுதி பெற்றுள்ளது. மீதமுள்ள அணிகளுக்கான தகுதி சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.